Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூ. 50




# உதயன்

சுடர் : 38
கதிர் : 322
சனிக்கிழமை 14 ஒக்ரோபர் 2023
புரட்டாதி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# இலங்கைச் சட்டங்களால் ஐ.நா. கடும் அதிருப்தி!

## புதிய சட்டவரைவுகளை மீளாய்வு செய்ய வலியுறுத்து

**கொழும்பு, ஒக்ரோபர் 14**

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவையும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டவரைவையும் மீளாய்வு செய்யவேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது. இந்த இரு சட்டவரைபுகளும் அதிகாரத் தரப்பினருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்குவதுடன் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறுவதாகவும் அமைந்துள்ளன என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.** »15

## குளவி கொட்டி 7 பேருக்கு பாதிப்பு

கிளி., ஒக்.14
குளவிக்கொட்டுக்கு இலக்கான 7 பேர் தருமபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் »15

## கஞ்சாவோடு இளைஞன் கைது!

யாழ்., ஒக்.14
பருத்தித்துறை, கொற்றாவத்தையில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். »15

## ரயிலில் இருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.14
ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். »15

## வாள்வெட்டில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.14
வடமராட்சி, துன்னாலையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 31 வயதான இளைஞர் ஒருவரே காயங்களுக்கு இலக்காகியுள்ளார். »15

வடக்கில்

## அடுத்துவரும் நாள்களில் கனமழைக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.14
வடக்கு மாகாணத்தில் அடுத்த சில நாள்களுக்குப் பரவலாக மழை கிடைக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.
வங்காள விரிகுடாவிலும், அரபிக் கடலிலும் உருவாகியுள்ள காற்றுச் சுழற்சிகள் காரணமாகவே வடக்கில் மழை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. »15

மிருசுவில் படுகொலையாளிக்கு

## கோத்தா வழங்கிய மன்னிப்பு; மறுபரிசீலனை மனு ஏற்பு

கொழும்பு, ஒக்.14
மிருசுவில் படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சிப்பாய்க்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.
இது தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த வருடம் மே மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.
2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி மிருசுவிலில் அப்பாவிப் பொதுமக்கள் எட்டுப்பேரை கொலை செய்த வழக்கில் சுனில் ரத்நாயக்கா என்ற »15

## 17 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்: மன்னாரில் மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.14
17 வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட »15

## பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு



கொழும்பு, ஒக்.14
பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக்காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் »15

புலமைப்பரீட்சைக்கு

## வடக்கில் இம்முறை 18,759 மாணவர்கள்

### பரீட்சை நிலையங்களும் தயார்

யாழ்ப்பாணம், ஒக். 14
வடக்கு மாகாணத்தில் இம்முறை 18 ஆயிரத்து 759 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்றனர் என்று வடக்கு மாகாணக் »15

## 'சனல்-4' விடயத்தை ஆராய நாடாளுமன்றில் விசேட குழு!

### 17ஆம் திகதி பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக்.14
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான 'சனல்-4' குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற விசேடகுழுவை நியமிப்பதற்கான பிரேரணை எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.
நாடாளுமன்றம் எதிர்வரும் 17 முதல் 20 ஆம் திகதி வரை கூட »15

## தீ விபத்தில் பெண் உயிரிழப்பு

யாழ்., ஒக்.14
குப்பைக்குத் தீவைத்த போது தீப்பற்றியதால் காயமடைந்த »15

## உழவியந்திரத்துடன் விபத்து; 17 வயதுச் சிறுவன் மரணம்!

கிளிநொச்சி, ஒக்.14
கிளிநொச்சி, யூனியன்குளத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
உழவு இயந்திரமும், மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது.
மோட்டார்சைக்கிளில் பயணித்த யூனியன்குளம், கோணாவிலைச் சேர்ந்த இ.இசையமுதன் »15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன மக்களின் உணர்வுகளுடன் ஈழத்தமிழர்களும் ஒன்றிக்கின்றனர்!!!

சிறிகாந்தா அறிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 14

**அரசியல் நீதி கோரி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்கள், தம்மைப் போலவே, ஏகாதிபத்திய சக்திகளால் வஞ்சிக்கப்பட்ட பலஸ்தீன மக்களோடு உணர்வுகளால் ஒன்றி நிற்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துச்சொல்லவேண்டிய நேரம் இதுவாகும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்தார்.**

அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

இஸ்ரேலின் அரச பயங்கரவாதத் துக்கும் பலஸ்தீன மக்களின் விடுத லைக்காக ஆயுதம் ஏந்திய ஹமாஸ் இயக்கத்தின் பயங்கரவாதத்துக்கும் இடையிலான போரே நடக்கின்றது. இஸ்ரேலுக்குள் ஊடுருவித் தாக்கிய ஹமாஸின் போர் நடவடிக்கையை சாட்டாக வைத்து, அதன் கட்டுப்பாட் டில் உள்ள காசா பிரதேசத்தையே தரைமட்டமாக்கி, இரு துண்டுகளாக அமைந்திருக்கும் பலஸ்தீன மண் ணின் ஒரு துண்டை ஒட்டுமொத்த மாக விழுங்கிவிடும் இலக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இஸ் ரேலுக்கு, அமெரிக்காவும் மேற்கு லக நாடுகள் பலவும் உதவிக் கொண்டிருக்கும் நிலைமையில், உலக அமைதியின் எதிர்காலமே கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் போரில் தலையிட்டு, போர் நிறுத்தத்தை சாதிக்கும் வல்லமை கொண்டுள்ள நாடுகள் எல்லாம், இஸ்ரேலின் பக்கமே இப்போது சாய்ந்து நிற்கின்றன. மத்திய கிழக் கின் இன்றைய நிலைமை, 14 வரு டங்களுக்கு முன்னர், எமது இலங் கைத் தீவில், வன்னிப் பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்ட மனித அவலத் தையே ஞாபகப்படுத்துகின்றது. அரசியல் நீதி கோரி நிற்கும் இலங் கைத்தமிழ்மக்கள், தம்மைப்போலவே, ஏகாதிபத்திய சக்திகளால் வஞ்சிக் கப்பட்ட பலஸ்தீன மக்களோடு உணர்வுகளால் ஒன்றி நிற்கின்றனர் என்பதை உலகுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய நேரம் இதுவாகும். இது தமிழ்த்தேசிய அமைப்புகள் அனைத் தினதும் கட்டாயக் கடமையும் கூட -என்றுள்ளது. (ஒ-26-27)

## பிரிட்டன் அமைச்சர் பளைக்கு களத்தரிசிப்பு

கிளிநொச்சி, ஒக். 14

பளை இந்திராபுரம் கிராமத்துக்கு பிரிட் டன் வெளிவிவகார அமைச்சர் அன் மேரி பெலிண்டா ரவேலியன் நேற்றுமுன்தி னம் சென்று களநிலைமைகளைப் பார் வையிட்டார்.

அங்கு வெடிபொருள்கள் அகற்றும் பணி களைப்பார்வையிட் அவர், கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெற்ற நிகழ்வில் பங்கேற்று கிராமத்தின் தேவைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

அமைச்சருடன் ஐக்கிய நாடுகள் அபிவி ருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதிநிதிகள், வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட னர். (ச-9)

## ஜனாதிபதித்தேர்தல் ஒத்திவைப்பு பேச்சுக்கே இடமில்லை என்கிறது மொட்டு

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் சர் வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று பொதுஜன பெர முன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

தேர்தல்முறைமை மாற்றம் தொடர்பில் அரசுக்குள் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-, தேர்தல்முறைமையை மாற்றல், தேர்தலை ஒத்தி வைத்தல், சர்வஜன வாக்கெடுப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் எம்முடன் எவரும் கலந்துரையாட வில்லை. வேறு எங்கும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவில்லை. எதிரணி தரப்பில் இருந்துதான் இப் படியானதொரு கதை வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்கும் நோக் கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதி முறை மையை இல்லாதொழிக்க முயற்சி எடுக்கப்படுமானால் அதற்கு நான் உட்பட பலர் ஆதவு வழங்கமாட்டோம். இதற்கான தேவைப்பாடும் அரசுக்கு இல்லை என்றே நினைக்கின்றேன்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல் முறைமையை மாற்ற போய் என்ன நடந்தது? உறுப்பினர்களின் எண் ணிக்கையை அதிகரித்து, தற்போது தேர்தலே இல்லா மல்போயுள்ளது -என்றார். (ஒ.44)

## இந்தியாவுடன் மின்னிணைப்பு தயாரானது இறுதி அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.14

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையி லான மின் இணைப்புத் தொடர்பான இறுதி அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் மதுரைக்கும், மன்னாருக்கும் இடையிலான 280 முதல் 300 கிலோ மீற்றர் இதற்குப் பொருத்தமான பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 400 மில்லியன் அமெ ரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த உத்தேச மதிப்பீடு தற் போது உள்ள செலவினத்தின் அடிப்படையி லேயே மதிப்பிடப்பட்டுள்ளது. சிலவேளை மதிப்பீட்டுத்தொகை அதிகரிக்கலாம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ-எ-6)

## காசாவில் போர் உக்கிரம் அகதிகளாக 4 இலட்சம் பேர்

ஐ.நா. அறிக்கை

ஜெருசலேம், ஒக். 14

இஸ்ரேலின் தாக்குதலையடுத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிலைவரப்படி காசாப் பகுதியில் இருந்து 4 இலட்சத்து 23 ஆயிரம் பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர் என்று ஐ.நா. அறிக்கை வெளி யிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது-

காசாப் பகுதியில் குடியிருப்புகள், பள்ளிகள், மசூதி கள், மருத்துவமனைகள் என எதையும் விட்டுவைக்காமல் இஸ்ரேலியப் படைகள் 7 நாள்க ளாகத் தாக்கிவரும் சூழலில் உயிருக்கு அஞ்சி இலட் சக்கணக்கானோர் அங்கிருந்து வெளியேறிய வண் ணம் உள்ளனர். கடைசித் தகவலின்படி காசாவிலி ருந்து 4 இலட்சத்து 23 ஆயிரம் பேர் வெளியேறியுள் ளனர். இதுவரை இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்து 200 பேரும், காஸாவில் ஆயிரத்து 100 பேரும் உயிரிழந் துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 752 குடியி ருப்புக் கட்டடங்களும், பிற கட்டடங்களும் தரைமட்ட மாகியுள்ளன. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தண்ணீர் வசதியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். 50 ஆயிரம் கர்ப்பிணிகள் உணவு, தண்ணீரின்றி வாடி வருகின்றனர். அவர்களை உடனடியாக மீட்காவிட்டால் அத்தனை பேரும் பட்டினியாலேயே உயிரிழக்க நேரி டும்- என்றுள்ளது. (ச-இ)

## பளை மருத்துவமனையில் குடிதண்ணீர் வசதியில்லை

நோயாளர் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஒக். 14

பளை மருத்துவமனையில் குடிதண்ணீர் வசதி இன்மையால் அங்கு சிகிச்சை பெறச் செல்வோரும் பணியாற்றுவோ ரும் குடிதண்ணீர் பெற சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று விச னம் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் பொதுமக்கள் தெரிவித்த தாவது:

இந்த மருத்துவமனை பிரதேசத்திலுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களுக்கான ஒரேயொரு மருத்துவம னையாகக் காணப்படுகிறது.

தினமும் நூற்றுக்கணக்கான நோயாளர் கள் சிகிச்சைபெற மருத்துவமனைக்கு வருகின்றனர்.

மருத்துவமனையில் கிணறு உள்ள போதிலும் அதன் நீரைப் பயன்படுத்த முடியாதநிலை காணப்படுவதால் சிகிச் சைபெற வருபவர்களிடம் போத்தலில் குடிதண்ணீர் கொண்டு வருமாறும் வலி யுறுத்தப்படுகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகம் மற் றும் பிரதேசசபை ஆகியவற்றால் வாக னம் மூலம் குடிதண்ணீர் வழங்குமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்த போதிலும் சுகாதாரத் திணைக்களத்தால் நிதி வழங்கப்படவில்லை என்று கூறப் படுகிறது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து நோயாளர்களின் அடிப்படைத் தேவை களில் ஒன்றான குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய வேண்டும் - என்றனர். (ச-9)

## புலமைப்பரீட்சை அனுமதியட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 14

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாழ்.குடாநாட்டுப் பாட சாலைகளில் சுபநேரத் தில் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

மாணவர்கள் பரீட்சை யில் சித்திபெற வேண்டி சிறப்புப் பூசைகளும் இடம்பெற்றன.

இந்தாண்டுக்கான புல மைப்பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கி ழமை நடைபெறவுள் ளது. (ச-17)

## விவசாயக் கிணறுகள் புனரமைப்பு துரிதம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணத்திலுள்ள தோட்டக் காணிகளில் பெரும் பாலான கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள் ளன என்றும் மிகுதிக் கிணறுகள் துரிதகதியில் புனர மைப்புச் செய்யபட்டு வருவதாகவும் யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

70 கிணறுகள் புனரமைப்புக்காக அடையாளம் காணப்பட்டு அதற்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதுவரையில் 50 சதவீதத்துக்கு மேலான கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். (ஒ-125)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஹமாஸின் தாக்குதலுக்கு இஸ்ரேல் அரசே பொறுப்பு!

## இஸ்ரேலியர்கள் கருத்துக்கணிப்பு

ஜெருசலேம், ஒக். 14

**இஸ்ரேல் மீது புரியப்பட்ட ஹமாஸின் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்கு பொறுப்புக்கூறும் வகையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாஹு இராஜினாமாச் செய்யவேண்டுமென இஸ்ரேல் மக்கள் மத்தியில் மேற் கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளதாக அரச ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

இந்தக் கருத்துக்கணிப்பில் 79 வீதமானோர் இஸ் ரேலிய அரசாங்கமே முழுப்பொறுப்பு எனக் கூறி யுள்ளனர்.

அத்துடன் 52 வீதமானவர்கள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலண்டும் தனது பதவியை துறக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளதுடன் சிலர் முன்னைய பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்சையும் தற்போதைய இராணுவ நடவடிக் கைகளில் இணைத்துக்கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளனர். (ச-6)

# இறையாண்மையை மீறுகின்றது இஸ்ரேல்

## ரஷ்யா கொந்தளிப்பு

## போர்விமானமும் தரையிறக்கம்

மொஸ்கோ, ஒக். 14

இஸ்ரேல் காசா மீது தாக்குதல் மேற் கொண்டு வரும் நிலையில் சிரியா மீதும் குண்டுகளை வீசியுள்ளது. இது முழுமை யான இறையாண்மை மீறலாகும். இவ் வாறு செய்வது போரின் தீவிரத்தை இரட்டிப்பாக்கும். இஸ்ரேல் தனது நிலை தெரிந்து நடக்கவேண்டும்.

- இவ்வாறு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் ரஷ்யா விமானப் படையின் போர் விமானம் சிரியாவின் லடாகியா விமானத் தளத்தில் தரையிறக் கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மத்திய தரைக்கடலில் அமெ ரிக்காவின் போர்க்கப்பல் நிலை நிறுத்தப் பட்டுள்ளது. அதேபோல பிரிட்டனின் போர்க்கப்பலை அனுப்பவும் முடிவெ டுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ரஷ்யா தனது போர் விமானத்தை சிரியாவுக்கு அனுப் பியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்த தாகப் பார்க்கப்படுகிறது என சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். (ச-இ)

# சிரியா மீதும் இஸ்ரேல் குண்டுவீசித் தாக்குதல்

## பரபரப்புக் குற்றச்சாட்டு

ஜெருசலேம். ஒக். 14

காசா மீது இஸ்ரேல் கடும் தாக்குதலைத் தொடுத்து வரும் நிலையில், சிரியா மீதும் குண்டுகளை வீசியுள்ளது என்று தெரிவிக் கப்படுகிறது.

பலஸ்தீன விடுதலையை வலியுறுத்தும் ஹமாஸ் அமைப்பு அண்மையில் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலையடுத்து, இஸ்ரே லும் பதிலுக்கு கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. காசா பகுதிக்கு குடிதண்ணீர், மின்சாரம், எரிபொருளை வழங்கும் இணைப்பை இஸ்ரேல் துண்டித்துத் தாக்கு தலை மேற்கொண்டுள்ளது.

இந்தநிலையில் இஸ்ரேலின் பாதுகாப்பு படையினர் தங்கள் நாட்டின் தலைநகர் மீது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாக் குதல் நடத்தியிருப்பதாக சிரியா குற்றம்சா ட்டியுள்ளது. சிரியத் தலைநகர் டமாஸ்கஸ் விமானநிலையத்தின்மீதும் வடபகுதி யிலுள்ள அலெப்போ விமானநிலையத்தின் மீதும் இந்தத் தாக்குதல் புரியப்பட்டுள்ளது என்று சிரியாவின் அரச செய்தி ஸ்தாபன மான 'சனா' தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இஸ்ரேல் இதுவரை பதிலளிக்கவில்லை. இந்தப் போக்கு நீடித்தால் இஸ்ரேலுக்கு எதிரான சண்டையை சிரியாவும் தொடங்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ச-6)

# அவுஸ்திரேலியாவில் மிக முக்கியமான வாக்கெடுப்பு

## பூர்வகுடிகளுக்கு அங்கீகாரம் கிடைக்குமா?

சிட்னி, ஒக். 14

அவுஸ்திரேலியாவில் பூர்வகுடி மக்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்குவ தற்கு மக்கள் ஆணைகோரும் வரலாற்று முக்கியத்துவம்மிக்க சர்வஜன வாக்கெடுப்பு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

பூர்வகுடி மக்களுக்கான நாடாளுமன்றப் பிர திநிதித்துவம் மற்றும் அமைப்புத் தொடர்பில் மக்களிடம் கருத்துக் கோரப்படுகின்றது. சர்வ ஜன வாக்கெடுப்பு வெற்றியளிக்கவேண்டுமெ னில் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50 வீதத்துக்கு மேல் 'யெஸ்' என இருத் தல்வேண்டும். அதேபோல அவுஸ்திரேலியா வில் உள்ள ஆறு மாநிலங்களில் நான்கு மாநிலங்களின் ஆதரவும் அவசியம்.

சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிபெற்று அது அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டால், பூர்வ குடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிரந் தரக் குழு நிறுவப்பட்டு, அந்தக்குழு பூர்வீக குடிகளைப் பாதிக்கும் நாட்டின் கொள்கை களை ஆராய்ந்து அவை தொடர்பில் அர சுக்கு அறிவுரை வழங்கும்.

ஆனால் நாடாளுமன்றம் தமக்கு இணங்காத கொள்கைகளை நிறைவேற்றுவதைத் தடுக்கும் அதிகாரம் இந்தக்குழுவுக்குக் கிடை யாது. சிலவேளை வாக்கெடுப்பு தோல்விய [illegible]



# புதினம் தெரியுமோ?

**பிள்ளையாரின்ர கலியாணவீடு மாதிரி இந்தியாவில இருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் ஓடுறதும் தள்ளிக் கொண்டே போகுது. போனகிழமை வெள்ளோட்டமா அந்தக் கப்பல் வந்தது. அதுக்குப் பிறகு கொஞ்சநாளைக்கு தொடர்ந்து ஓடுமெண்டும், பிறகு இடையில மழை தொடங்க நிப்பாட்டிப் போட்டு தை மாதத்தில இருந்து ஒழுங்கா ஓடுமெண்டும் அறிவிச்சவை. ஆனால் வெள்ளோட்டத்துக்குப் பிறகு ரண்டு தரம் கப்பல் ஓட்டத்தை தள்ளிவைச்சுப் போட்டினம்.**

**இந்தக் கப்பல் ஓடுற கதை இண்டைக்கு நேற்றைக்குத் தொடங்கினதில்லை. மறவன் புலவு சச்சியர் இலங்கைக்கு திரும்ப வந்ததில இருந்து ஒவ்வொரு மார்கழி மாசமும் 'இந்த வருசம் திருவாதிரைத் திருவிழாவுக்கு இந்தி யாவுக்கு கப்பல் ஓடும். ரண்டு அரசாங்கமும் அதுக்கு ஓமெண்டிட்டினம்' எண்டொரு செய்தி யைக் கிளப்பி விடுவார். அதோட அந்தக் கப்பல்ல இந்தியாவுக்குப் போறவையை தங்களிட்ட பதிவு செய்யவும் சொல்லுவார். திருவிழாவுக்குப் போற சாட்டில இந்தியாவையும் பார்த்திட்டு வருவம் எண்டு நினைக்கிறவை அடிச்சுப் பிடிச்சுக் கொண்டு, சச்சியரின்ர அமைப்பிட்ட பதிவும் செய்வினம். அப்பிடி பதிவு செய்த ஆக்களை தன்ர சிவசேனைக்கு உறுப்பினராச் சச்சியர் சேர்த்தாரே தவிர கப்பல் ஒருக்காலும் ஓடவேயில்லை.**

**ஆனாலும் எப்பிடி இழுபறி நடந்தாலும், இந்தமுறை கப்பல் ஓடத்தான் போகுது. அப்பிடி திரும்ப இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் கப்பல் ஓடுறதுக்கு முதல் புள்ளி போட்டதோட, அங்கையிஞ்ச ஓடித்திரிஞ்சு அலுவல் பார்த்தவர் சச்சியர் எண்டதும் உண்மைதான். அதாலதான் இந்தியாவில இருந்து காங்கேசனுக்கு கப்பல் வெளிக்கிடுற துறைமுகமான நாகைப் பட்டினத்தில போய் சச்சியர் விழுந்து கும்பிட்டு வித்தை காட்டினவர்.**

**ரண்டு நாட்டிலையும் கப்பல் ஓடுறதுக்கு துறை முகங்களில வசதி பத்தாது. அதுக்கேத்த கட்டடங்களைக் கட்ட நாள் எடுக்கும் எண்டுதான் இவ்வளவுநாளும் கப்பல் ஓடுறதை இழுத்தடிச் சவை. ஆனால் இப்ப அதெல்லாம் கட்டிமுடிச்சு, வெள்ளோட்டமும் ஓடின பிறகு 'நிர்வாகச் சிக்கல்', 'காலநிலைக் குழப்பம்' எண்டு ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி கப்பல் ஓடுறதைத் தள்ளிப்போட்டபடி இருக்கினம். ஒருமாதிரி இண்டைக்கு கப்பல் ஓடுமெண்டு அறிவிச்சிருக் கினம். ஆனால் ரண்டு தாழமுக்கங்கள் உருவாகியிருக்கிற இந்த நேரத்தில, திரும்பவும் காலநிலைக் குழப்பம் எண்டு கப்பல் ஓடாமல் இருக்கத்தான் சான்ஸ் கூட. உண்மையா காலநிலைக் குழப்பத்தால தான் இந்தியக் கப்பல் ஓடேலையா? இல்லாட்டி பின்னுக்கு வேற ஏதும் உள்குத்துகள் இருக்கா? எண்டெதெல்லாம் அந்த 'செரியாபாணி' கப்பலுக்குத்தான் வெளிச்சம். அதைவிட உந்தக் கப்பலின்ர ரிக்கெற் ரேட் பற்றியும் ஒரு தனிக்கதை இருக்குது. அதை கப்பல் ஓடத் தொடங்கின பிறகு பட்சி உங்களுக்கு வடிவாச் சொல்லும்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆலயங்களில் நவராத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 14
கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசையை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து பத்து நாள்கள் நவராத்தி பூசை வழிபாடுகள் இடம்பெற்று எதிர்வரும் 24ஆம் திகதி மானம்பூ உற்சவம் நடைபெறும் என்று ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ச-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.14
நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு பூசைளுடன் ஆரம்பமாகி நடைபெறும் என்று ஆலய பிரதம குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 14
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து தினங்கள் வழிபாடுகள் நடைபெறும்.
எதிர்வரும் 24ஆம் திகதி விஜயதசமி அன்று பிற்பகல் கன்னி வாழைவெட்டுதலும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ச-17)

★ ★ ★

யாழ்.வண்ணை சாந்தை யாமடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 24ஆம் திகதி விஜயதசமி அன்று முற்பகல் 10 மணிக்கு ஏடுதொடக்கல் நிகழ்வு இடம்பெறும். (ச-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 14
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்திலும் நவராத்திரி பூசை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேகம் மற்றும் நவராத்திரி பாமாலை இசைத்தல் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-17)

# சனீஸ்வர வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 14
புரட்டாதி கடைசிச் சனி விரத வழிபாட்டை முன்னிட்டு இன்று சனிக்கிழமை யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் சிறப்புப் பூசைகள் இடம்பெறவுள்ளன.
சனீஸ்வரபகவானுக்கு சிறப்பு அபிஷேகம் இடம்பெற்று சுட்டிகளில் எள்ளெண்ணெய் எரிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (ச-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 14
புரட்டாதி கடைசிச் சனிக்கிழமையான இன்று பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் விசேட அபிஷேகமும் விசேட ஹோமமும் இடம்பெறவுள்ளது. அடியவர்கள் வழிபாடுகளில் பங்கேற்று தோஷ நிவர்த்தி பெறுமாறு ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-9)

# மாகாணக் கண்காட்சி போட்டித் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 14
கிராமிய கைத்தொழில் திணைக்களம் தேசிய அருங்கலை பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் 'சில்ப அபிமானி 2023' மாகாண கைத்தொழில் கண்காட்சிக்குரிய போட்டித் தெரிவு நிகழ்வானது அடுத்த மாதம் 15ஆம் மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் இடம்பெறும்.
ஆக்கங்களைச் சமர்ப்பிக்கின்ற கைப்பணியாளர்கள் தமது கைப்பணி ஆக்கங்களை தமது பிரிவு பிரதேச செயலக கைத்தொழில் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் அடுத்த மாதம் முதல் வாரத்துக்குள் சமர்ப்பிக்கமுடியும் என்பதுடன் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் தேசிய மட்ட போட்டிக்கு கொண்டு செல்லப்படும் அதன் தெரிவானது டிசெம்பர் மாதம் 19ஆம், 20 ஆம் திகதிகளில் இடம்பெறும் என்பதை யாழ். மாவட்டச் செயலக தேசிய அருங்கலை பேரவை அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ-125)

# திருமந்திர மாநாட்டு மலர் ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை மற்றும் சைவ மகாசபை ஆகியன இணைந்து நடத்தும் திருமந்திர மாநாட்டு மலருக்கு திருமந்திரத்தோடு தொடர்புடைய ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.
ஆக்கங்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன் காங்கேசன்துறை சாலையிலுள்ள பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள நாவலர் அச்சகத்தில் நேரடியாகவோ அல்லது சைவ காரியதரிசியின் 0770756333 எனும் 'வட்சப்' இலக்கத்துக்கோ அனுப்பி வைக்கலாம்.
ஆக்கங்கள் 3 - 4 (ஏ- 4) பக்கங்களைவிட அதிகரித்தல் ஆகாது.
ஆக்கங்களை பிரசுரிப்பதில் - செம்மைப்படுத்துவதில் ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# அமரர் பசுபதிப்பிள்ளைக்கு கிளி.யில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 14
வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளையின் முதலாம் ஆண்டு நினைவுநாள் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசா மேய்ப்புப் பணி நிலைய மண்டபத்தில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படவுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் எழுத்தாளரும், அரசியல் விமர்சகருமான நிலாந்தன் நினைவுப் பேருரை ஆற்றவுள்ளார். (ச-100)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துபோகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசைவாட்டும். உறவினர்களுடன் பகைமை வந்து செல்லும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்கநேரிடும்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளைக் கையாளுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலவிஷயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணுச் சாதனங்கள் வாங்குவீர்கள்.

# தே.அ.அட்டை நடமாடும் சேவை



சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரிவுகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நேற்று முன்தினம்வியாழக்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மேற்படி பிரதேச செயலர் திருமதி. யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஒக். 14
ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு புனித இசிதோர் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.
அனைத்து அங்கத்தவர்களும் புதிதாக அமைப்புடன் இணைய விருப்பமுள்ளவர்களும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல்

# வேட்புமனு நிராகரிப்பு ஜனநாயக விரோதம்!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.14**

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் அரசாங்கம் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு எடுக்கும் முயற்சி ஜனநாயக விரோதமானது.**

- இவ்வாறு தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது- உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தற்போதும் செயற்பாட்டிலேயே இருக்கிறது. தேர்தலைப் பிற்போடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவும் இதுவரை அறிவிக்கவில்லை.

அரசாங்கமும் தேர்தலைப் பிற்போடவில்லை. அரசாங்கத்துக்கு அதற்கு அதிகாரமும் இல்லை. தற்போது அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்திருக்கும் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் முயற்சிக்கின்றது. நாடாளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் வேட்புமனுக்களை நிராகரிக்க முடியாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது.

அதேநேரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது தொடர்பில் நீதிமன்றில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுவிசாரிக்கப்பட்டுவருகின்றன. நீதிமன்றம் ஊடாகவோ அல்லது அரசாங்கத்திடமிருந்து தேவையான நிதியைப் பெற்று தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாகவோ ஊள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கும் 'என நாங்கள் எதிர்பார்க்கிறோம் - என்றார். (எ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 08 . 1923

மறைவு 11 . 10 . 2023

## திருமதி ஜோசப் அருளம்மா

நவாலியை பிறப்பிடமாகவும் 19/8 அடப்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோசப் அருளம்மா கடந்த (11.10.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனாசி - பெர்னாடோ தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இற்பியல் - விக்டோரியா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற இற்பியல் ஜோசப்பின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற திரு் செவேத்தி (நவாலி. கனடா). காலஞ்சென்ற செல்லையா (நவாலி) மற்றும் சின்னையா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். ஜெயம். ஜெயராஜா (பிரான்ஸ்). றேமன் (பிரான்ஸ). பாலன். காலஞ்சென்ற ஜெயராணி. ஜெயமணி (லண்டன்). மேவின் (நோர்வே). நேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும். இந்துமதி. செல்வராணி (பிரான்ஸ்). பவளம். ஆன்றோஸ் (நோர்வே). வதனி. காலஞ்சென்ற அன்ரனிதாஸ். வரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும். சிந்துஜன். சறோன். றஜிந்தன். யோயல். றெமில்ரன். ஜெருஷா. அஞ்சலீன். ஸ்ரீபன். சிறாணி. கொன்ஷன்ரைன். றோமா. ஸ்ரெபானி. டனி. கெவின். ரெமி. நியோமி. அஷ்னி. மினலி ஆகியோரின் பேர்த்தியும். நிலா. நெல். நேஹா. ஆபேல். அமெலியா. சிறோன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவருடைய இல்லத்திலிருந்து இன்று (14.10.2023) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு பின்பு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

**19/8, அடப்பன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**பிள்ளைகள்**

# மீண்டும் வெள்ள அபாயம்

கொழும்பு, ஒக்.14

அக்குரஸ்ஸ, மாலிம்பட, திஹகொட, கும்புறுப்பிட்டிய, மாத்தறை பிரதேச செயலகப்பிரிவுகளில் வெள்ள நிலைமை மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆற்றங்கரைப் பகுதிகளில் விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கையை அடுத்த 24 மணி நேரத்துக்கு நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நில்வள ஆற்றுப் பகுதியில் பெய்து வரும் மழையால் ஆற்றுப் படுக்கையின் தாழ்வான பகுதிகளில் மீண்டும் வெள்ளம் அதிகரிக்கக் கூடும் என நீர்ப்பாசனத்திணைக்களம் எச்சரித்துள்ளது.

பல பகுதிகளில் வெள்ளம் குறைந்தாலும், சில பகுதிகள் மேலும் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கக்கூடும் என்பதால், அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், பயணிக்கும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பலஸ்தீனருக்காகத் தமிழர் குரல் கொடுப்பது அவசியம்!

## அரசியல் செயற்பாட்டாளர் அருந்தவபாலன் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், ஒக். 14*

ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் தொடுத்துள்ள போர் நடவடிக்கையானது காசாவில் மிகக் குறுகிய இடப்பரப்பில் வாழ்ந்து வரும் இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் பேரழிவுக்கும் வழிவகுக்கின்றது. பலஸ்தீன மக்களின் வலிகளை ஈழத்தமிழர்களாகிய எம்மால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அவர்களின் உரிமைகளுக்காக ஆதரவைத்தெரிவிக்கவேண்டியது எமது கடமையாகும்.

- இவ்வாறு அரசியல், சமூகச்செயற்பாட்டாளரான க. அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

தமது வாழ்விடங்களை இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள் பறிகொடுத்து அகதிகளாகவும் இஸ்ரேலின் அடக்குமுறைக்குள்ளும் பலஸ்தீன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இஸ்ரேல் ஐ.நா.வின் தீர்மானங்களையும் சர்வதேசசட்டங்களையும் தொடர்ந்து புறக்கணித்து வருவதுடன் பலஸ்தீனத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே செயற்பட்டு வருகிறது. காசாவை முழுமையாகத்துடைத்தெறிவதற்காக திட்டமிட்ட யுத்த நடவடிக்கைகளில் இஸ்ரேல் படைகள் களமிறங்கியுள்ளன.

இது பெரும் மனிதப்பேரவலத்தை மத்திய கிழக்கில் தோற்றுவிக்கப்போகிறது. இந்தத் தாக்குதல் எந்தத் தரப்பினராலும் ஏற்று[illegible] - என்றார்.

# ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் குளறுபடி!

## முன்னாள் ஜனாதிபதி சீற்றம்

கொழும்பு, ஒக். 14

ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. இது மிகப் பெரிய மோசடி நடவடிக்கையாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதுள்ள ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்திவிட்டு, நாடாளுமன்றம் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய முயற்சி எடுக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் ஊடாக ஜனாதிபதியைத் தெரிவு செய்வது பொருத்தமான நடவடிக்கை அல்ல. அதுமோசடிநடவடிக்கையே. நாம் மென்மேலும் படுகுழிக்குள் செல்வதா? அல்லது மீள்வதா? என்பது பற்றிச் சிந்திக்கவேண்டிய தருணம் இதுவே-என்றார். (ச-44)

# நுண்நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்த வர்த்தமானி

கொழும்பு, ஒக்.14

தற்போது நாட்டில் நுண்நிதிக் கடன் கொடுக்கல் - வாங்கல்களில் 15 ஆயிரம் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 54 நிறுவனங்கள் மட்டுமே மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத நிதி நிறுவனங்க ளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் நுண்நிதிக் கடன் அதிகாரசபை வர்த்தமானி நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நுண்நிதிக் கடன் நிறுவனங்களின் கடன் வசூலிக்கும் அதிகாரிகளின் செயற்பாடுகள் காரணமாக 24 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதானமாக கிராமப்புறப் பெண்கள் பல்வேறு உடல், உள அழுத்தங்களுக்கு ஆளாகியுள்ளனர். தற்கொலை முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன. இந்த விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்தே இந்தச் சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி நிறுவனங்கள் அரசாங்கத்திடமிருந்து பல்வேறு சலுகைகளை பெற்றுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்ணியச் செயற்பாட்டாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தபோது, இந்த விடயத்தில் மத்திய வங்கி கையாலாகாத நிலையிலேயே உள்ளது என்று தெரிவித்துள்ளார். (எ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பாலயம்: அந்திமகாலத்து அரவணைப்பு



சர்வதேச இறுதி கால பராமரிப்பு தினம்

உலகளாவிய ரீதியில் சுகாதார நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றம், வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்குக் காரணமாக மாறியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளில் முதியோர்களுக்கான சுகாதார மருத்துவக் கவனிப்பு முன்னேற்றகரமாக மாறியுள்ளதால் அவர்களுக்கு இதுவொரு சவாலான விடயமாக இருப்பதில்லை. மாறாக வளர்ச்சியடையும் நாடுகள், பொருளாதாரம் நலிவுநிலையில் உள்ள நாடுகள் முதியோர் கவனிப்புக்கென பெரியளவு நிதியைச் செலவிடும் நிலை தோன்றியுள்ளது. இதனால் அந்நாடுகள் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் பெரும் சவாலைச் சந்திக்கின்றன நவீன தொழில்நுட்ப மாற்றம், வாழ்க்கை முறை என்பவற்றால் உயிரை அச்சுறுத்தும் புற்றுநோய், இருதயநோய், சிறுநீரகநோய் போன்றவை அதிகரித்து செல்வது உலகளாவிய பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

நமது நாட்டு கலாசார பண்பாட்டு விழுமியங்களின் அடிப்படையில் கடுமையாக நோயுற்றவர்களை அல்லது வயோதிபர்களை வீட்டில் வைத்து அவர்களின் இறுதிக்காலத்தில் பராமரித்தமை, முன்னொரு காலத்தில் மிகவும் உணர்வு பூர்வமானதாக இருந்தது. கடுமையாக நோயுற்றவர்களை வெளியே தனித்து விடுவது தொடர்பில் சமூகத்தில் களங்க மனப்பான்மை முன்பு இருந்தது யாம் அறிந்ததே. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கடுமையாக நோயுற்றவர்களை, வயோதிபர்களை

> “இறுதிக்கால கவனிப்புத் தேவைப்படும் புற்றுநோயாளர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் புற்றுநோய் தவிர்ந்த ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டு இறுதிக்கால பராமரிப்பு தேவைப்படும் நோயாளர்களையும் பராமரிக்கவென அனைத்து வசதிகளுடன் கூடிய காப்பகம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.”



நிறுவன ரீதியான கவனிப்புக்கு உட்படுத்தவேண்டிய நிலை தற்போது எமது நாட்டில் உள்ளது. இந்த நிலை மாற்றத்துக்கு உட்பட்ட வகையில் எமது பகுதியில் இறுதிக்காலப் பராமரிப்பு சேவையை ஸ்திரப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். வீடுகளில் வைத்துப் பராமரிக்க முடியாத கடும் நோயுற்றவர்களை அவர்களின் உறவினர்களின் நெருக்கத்தோடு உரிய முறையில் உடல், உள ,சமூக ஆன்மிக நன்நிலைகளைப் பேணும் வகையில் காப்பக சேவைமூலம் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே அரச சுகாதாரத்துறையின் பிரதான குறிக்கோளாகும்.

அத்துடன் இறுதிக்கால பராமரிப்பு சேவை தேவைப்படுபவர்களை காப்பக சேவைக்காக கொண்டு வருவதும், இறந்த பின்னர் அவர்களை உரியமுறையில் வீடுகளுக்குக் கொண்டுசென்று கௌரவமான முறையில் இறுதிக்கிரியைகளை செய்வதில் உள்ள நிதி , நிர்வாக ரீதியான தடைகளைச் சீர் செய்ய வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது. முதுமையால் ஏற்படும் உடல், உள ஆரோக்கியமின்மைக்கும் Life threating நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குமாக நோய் தணிப்பு மருத்துவம் (Palliative Medicine Service) இலங்கையில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு தேசிய சுகாதாரக் கட்டமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். வடபகுதியைப் பொறுத்தவரை பிரதான மருத்துவமனைகளில் இறுதிக் கால மருத்துவ சிகிச்சை அலகுகளை ஆரம்பிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



இதற்கு முன்னோடியாக வீடுகளில் போதிய மருத்துவக் கவனிப்பின்றி உள்ள நோயாளர்களுக்கு நோய் தணிப்பு, உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடு வடபகுதியில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சர்வதேச மருத்துவ சுகாதாரநிறுவனம் கனடா (IMHO CANADA) இதற்குரிய நிதி அனுசரணையை வழங்கி வருகின்றது.

இந்தச் சேவையை மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் பல இடங்களிலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. நோயாளர்களின் இறுதிக்காலம் என்பது எவ்வித வலி, வேதனை இன்றி இறக்கும் வரைக்கும் வாழ வேண்டும் என்பதும், இறப்பானது அமைதியாகவும், கௌரவமாகவும் நடைபெறவேண்டும் என்பதும் இதன் பிரதான நோக்கங்களாகும்.

யாழ்ப்பாணத்தில் CANE - UK நிறுவனத்தால் CANE இலங்கை அமைப்புடன் இணைந்து நடத்தப்படும் ‘அன்பாலயம் புற்றுநோயாளர் காப்பகம்’ முன்மாதிரியாக அமைந்துள்ளது. இங்கு புற்றுநோய்க்கு சிகிச்சைபெறும் நோயாளர்கள்,

இறுதிக் கால கவனிப்புத் தேவைப்படும் புற்றுநோயாளர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் புற்றுநோய் தவிர்ந்த ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டு இறுதிக்கால பராமரிப்புத் தேவைப்படும் நோயாளர்களையும் பராமரிக்கவென அனைத்து வசதிகளுடன் கூடிய காப்பகம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வயோதிபத்தால் ஏற்படும் இறுதிநிலைப் பராமரிப்பு சேவையோ, நோய்களால் ஏற்படும் இறுதிநிலைப் பராமரிப்பு சேவையோ, உலகத்தரம் வாய்ந்த சேவையாக மாற்றப்படவேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. இந்தச் சேவைக்கான ஆளணி வள விருத்தி, பௌதிக வள விருத்தி என்பன பல கொடையாளர்களின் நிதிப்பங்களிப்புடன் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு வருகின்றன. CANE - UK அமைப்பானது இலவச புலமைப்பரிசில்களை வழங்கி இறுதிநிலைக் கால மருத்துவ சேவைக்கான ஆளணி வள விருத்தியில் முக்கியமான பங்காற்றி வருகின்றது. மேலும் அன்பாலயம் காப்பகத்தில் பராமரிக்கப்படும் நோயாளர்களுக்கான உப சேவைகளை விருத்தி செய்வதிலும் CANE - UK அமைப்பானது பங்காற்றி வருகின்றது.

உலகளாவிய ரீதியாக ஒக்ரோபர் 14 ஆம் திகதி இறுதிக்கால பராமரிப்பு சேவை தினமாக பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய விழிப்புணர்வை உண்டு பண்ணுவதன் மூலம் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு பங்களிக்கலாம் என்று கருதப்படுகிறது.

அன்பாலயம் புற்று நோயாளர் காப்பகமானது முற்றிலும் இலவசமாகவே சேவைகளை வழங்கி வருகின்றது. இந்த இறுதிக்கால பராமரிப்பு சேவை தினத்தில் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு பங்களித்து வரும் அரச, அரச சார்பற்ற, தனியார்துறை மற்றும் ஆர்வமுடையோரை கௌரவப்படுத்துவது சிறப்பானது. மேலும் இந்தத் துறையின் விருத்திக்கு நிதிப் பங்களிப்பு, தொழில்நுட்ப ரீதியான பங்களிப்புகளை வழங்கக்கூடியவர்களை அன்புடன் CANE இலங்கை அமைப்பு வரவேற்கிறது. இறுதிக் காலங்களில் ஏற்படும் வலி, வேதனை, கவனிப்பில் புறக்கணிப்பு என்பவற்றில் இருந்து நோயாளர்களை, முதியவர்களை சமூகமாக சேர்ந்து பாதுகாப்பதற்கு ஒன்றிணைவோமாக.

**தொடர்புகளுக்கு:**
**இ.முகுந்தன், நிர்வாகி**
CANE இல - 05 சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில்,சுன்னாகம் . **0212240258**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கெடுகிறேன்பார், பந்தயம் பிடி!

இலங்கையில் நடைபெற்ற இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் வருகை தந்திருந்தார். இவர் தனது பயணத்தின்போது ஜனாதிபதி ரணிலையும் சந்தித்திருந்தார். இலங்கையுடன் உடன்பாடுகளிலும் கைச்சாத்திட்டிருந்தார். மாநாட்டில் உரையாற்றிய ஜெய்சங்கர் முக்கியமான விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். 'சாத்தியமற்ற திட்டங்கள் தீர்க்க முடியாத கடன்கள் தொடர்பாக இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் தெளிவாக இருக்கவேண்டும். இந்தத் திட்டங்களின் பின்னால் உள்ள அபாயங்களை நாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும். இதை மேற்கு நாடுகள் சீனாவின் கடன்பொறி இராஜதந்திரம் என்று வர்ணிக்கின்றன' என்று அவரது உரையின் ஒருபகுதி அமைந்திருந்தது.

அணில் ஏற விட்ட நாயைப்போல இலங்கை சீனாவின் கடன்பொறியில் சிக்கி மீள முடியாமல் இருப்பது மாத்திரமல்லாது, சீனாவின் பக்கம் இலங்கை சாய்ந்து இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுதலாக மாறியிருப்பதற்கும் காரணம் வேறு யாருமல்ல,அதுவும் இந்தியாதான். இதில் இருவேறு மாற்றுக் கருத்துகள் இருக்கமுடியாது. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இந்தியாவிடமே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான பெருந்தொகை கடனைக் கோரியிருந்தார். ஆனால் இந்தியா கைவிரித்துவிட, சீனா அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. இப்போது இலங்கை, சீனாவின் கயிற்றில்தான் தொங்கிக்கொண்டிருக்கின்றது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், எவ்வளவுதான் அறிவுரை சொன்னாலும் இலங்கையை சீனாவின் பிடியிலிருந்து மீட்பதென்பது இயலாத காரியம் என்பது அவருக்கும் நன்கு தெரிந்தேயிருக்கும்.

ஜெய்சங்கர் இவ்வாறு உரையாற்றிய மறுநாளே 'காலி கலந்துரையாடல் 2023 சர்வதேச சமுத்திரவியல் மாநாடு' இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆசியா–பசுபிக் என்பது ஒருவகை சித்திரிப்பாகும். இரண்டாம் உலகப்போரின் பின்னர் பசுபிக் வலயத்துக்குள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் கேந்திர நிலையம் மற்றும் கலந்துரையாடல் கட்டமைப்பை உருவாக்குதல், சீனா உட்பட ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய – பசுபிக் பொருளாதாரத்தை கட்டமைத்தல் என்பவையே இதன் ஆரம்பமாகும். அது பொருளாதார எழுச்சி என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரே தடம் ஒரே பாதை என்றால் என்ன? அதனைப் பாதுகாப்பு எழுச்சியென சிலர் கூறினாலும், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவுக்கு இடையில் காணப்படும் வரலாற்று வர்த்தகத் தொடர்பின் ஊடான எழுச்சி, சீனாவை மையப்படுத்திய வர்த்தக வேலைத்திட்டம் என்பதே எமது நிலைப்பாடா கும்' என்று குறிப்பிடுகின்றார்.

'ஒரே தடம் ஒரே பாதை' என்ற சீனாவின் வேலைத்திட்டத்தை, இந்தியா உள்ளிட்ட மேற்கு நாடுகள் பாதுகாப்புக் கரிசனையுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா தன்னை நிலைநிறுத்துவதற்காகச் செய்யும் ஒன்றாகவே பார்க்கின்றன. அதன் அடிப்படையிலேயே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா 99 ஆண்டுகால குத்தகைக்கு எடுத்ததையும் நோக்குகின்றன. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனா இராணுவ நலனுக்காக பயன்படுத்துகின்றது என்று மேற்கு ஊடகங்கள் கூறுவதை மறுதலிப்பதுடன், சீனாவின் ஒரே தடம் ஒரே பாதைத் திட்டம் வர்த்தக நோக்கிலானது என்கின்றார். இது இந்தியாவை அழைத்து அவர்கள் முகத்தில் கரி பூசியதற்கு ஒப்பாகும். ஜே.ஆர். காலத்தில் ராஜீவ்காந்திக்கு கடற்படைச் சிப்பாய் துப்பாக்கியால் தாக்கியதை விட பல மடங்கு தாக்குதலை ஜனாதிபதி ரணிலே நேரில் தொடுத்திருக்கின்றார்.

இந்தியா என்ன உதவிகளைச் செய்தாலும் , ஆயிரம் அறிவுரைகள் சொன்னாலும் இலங்கையை இனிச் சீனாவின் பக்கமிருந்து மீட்பதென்பது முடியாது.அத்தோடு பந்தயம் பிடி என்றிருக்கும் இலங்கைக்கு உதவி செய்யவும் இனிமேல் யார் வரப்போகின்றார்கள்?

நாளொரு நல்வார்த்தை

பணம் பணம் என்று மனிதர்கள் உலகத்தில் ஓடி உழைக்கிறார்கள். ஆனால், நிம்மதியை தொலைத்து விடுகிறார்கள்.

–சார்லி சப்ளின்–




# புதிய அரசியலை வலியுறுத்தி போராடத்தயாராகும் பிக்குகள்

## தமிழ் மக்களிடமும் அழைப்பு

**கொழும்பு, ஒக். 14**

**நாட்டில் தற்போது தோல்விகண்ட அரசியல் முறைமையை மாற்றி, புதியதொரு அரசியல் சக்தியைக் கட்டியெழுப்பும் நோக்கில் புதிய சுதந்திரப்போராட்டம் எனும் பெயரில் பிக்குகள் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அனைத்து இனமக்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

இதற்காக மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர் தலைமையில் இன்று சனிக்கிழமை மிஹிந்தலை விகாரையில் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பில் மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதி உட்பட 226 பேராலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்பமுடியாமல்போயுள்ளது. ஆட்சியைக்கைவிடும் நிலையிலும் அவர்கள் இல்லை.குடும்ப நலனுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அரச திணைக்களங்களின் செயற்பாடுகளும் திருப்தியாக இல்லை. ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடுகின்றன. இந்த நிலைமை தொடர இடமளிக்கக்கூடாது. எனவேதான் இன, மத, குல, பேதமின்றி புதியதொரு பயணத்தை மேற்கொள்ள நாம் அழைக்கின்றோம். இந்த அரசியல் பயணத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. நாளைய கூட்டம் முடிவடைந்த பின்னர் மாவட்டந்தோறும் குறித்த கூட்டங்கள் நடத்தப்படும். இந்தப் புதிய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் மக்களும் எம்மோடு இணைய வேண்டும் - என்றார். (ச-44)

# அரசுடன் செயற்படோம்; தேர்தலை நடத்துங்கள்

## எதிர்க்கட்சி விடாப்பிடி

இணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுவதை விட்டு விட்டு அரசாங்கம் தேர்தலை நடத்த முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

ஜனாதிபதி உட்பட ஆளுங்கட்சியினர் எதிரணிக்கு இணைந்து செயற்படுவதற்கு விடுத்த அழைப்புத் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இந்த விடயத்தைத் தெரிவித்தது. இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளரான முஜிபூர் ரஹ்மான் மேலும் கூறுகையில்,

இலங்கை வீழவில்லை. ஆட்சியாளர்களின் தவறான முடிவுகளால் வீழ்த்தப்பட்டது. கோத்தாபய ராஜபக்ச தவறான முடிவுகளை எடுத்ததால் நாட்டில் நெருக்கடிகள் உச்சம் பெற்றன. அந்தக் குழுவுக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கிறார். அவர்களுடன் நாம் எப்படி இணைந்து செயற்படுவோம். அந்தத் தரப்புக்கு மக்கள் ஆணை இல்லை. எனவே, தேர்தலொன்று நடத்தப்பட்டு, மக்கள் ஆணையுடன் புதிய ஆட்சி அமையவேண்டும். ஜனாதிபதி அரசுடன் இணைந்து செயற்பட அழைப்பு விடுப்பதைவிடுத்து அதற்கு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-44)

நாளை 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை புரட்டாதி 28

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.02 - 06.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுவாரஸியமான புள்ளிவிவரங்கள்...

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக தென்னாபிரிக்க வீரர் குயின்டன் டி கொக் 109 ஓட்டங்களைப் பெற்றார். நடப்பு தொடரில் அடிக்கப்பட்ட 12ஆவது சதம் இதுவாகும். ஒரு உலகக் கிண்ணத்தில் முதல் 10 ஆட்டங்களில் அடிக்கப்பட்ட அதிகபட்ச சதங்கள் இது தான். இதற்கு முன்பு 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் முதல் 10 ஆட்டங்களில் 7 சதங்க்ள் பதிவானதே அதிகபட்சமாக இருந்தது.

உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலியா தனது முதல் இரு ஆட்டங்களில் தோற்பது 1992ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும். 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் கடைசி இரு ஆட்டங்களில் (தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக) தோல்வியை தழுவிய அவுஸ்திரேலியா இந்த உலகக் கிண்ணத்திலும் முதல் இரு ஆட்டங்களில் உதை வாங்கி இருக்கிறது. உலகக் கிண்ண கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக 4 ஆட்டங்களில் தோற்பது இதுவே முதல் முறையாகும்.

அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ணத்தில் 300 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை ஒரு போதும் வெற்றிகரமாக விரட்டிப்பிடித்தது கிடையாது. அந்தப் பரிதாபம் மீண்டும் தொடர்கிறது.

அவுஸ்திரேலிய அணி 134 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவிடம் தோற்று இருக்கிறது. உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெரிய தோல்வி இதுவாகும். இதற்கு முன்பு 1983ஆம் ஆண்டு இந்தியாவிடம் 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சரண் அடைந்து இருந்தது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 7 பிடியெடுப்புக்களை தவறவிட்டது. இதில் மார்க்ரம், மில்லர் ஆகியோரின் பிடியெடுப்புக்களைத் தவற விட்டதும் அடங்கும்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை 10 ஆட்டங்கள் நடந்துள்ளன. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அணிகள் 8 ஆட்டங்களில் தோல்வியைச் சந்தித்துள்ளன.

# நிதானமாக பங்களாதேஷை பந்தாடியது நியூஸிலாந்து

**உலகக் கிண்ணக் கிரிக்கெட்தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி இலகுவாக பங்களாதேஷ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்த ஆட்டம் சென்னை, சேப்பாக்கத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.**

நேற்றைய ஆட்டத்தில் கேன் வில்லியம்சன் அணிக்குள் எடுக்கப்பட்டிருந்த நிலையில், ஆரம்ப வீரர் வில் எங் அணியிலிருந்து வெளியேறியிருந்தார்.

ஆரம்பமே நியூஸிக்கு அசத்தலாக இருந்தது. டிரெண்ட் போல்ட் வீசிய முதல் பந்தில் லிட்டன் தாஸ் மேட் ஹென்றி இடம் பிடி கொடுத்து பரிதாபமாக வெளியேறினார். அதன் பின்னர் வந்தவர்களும் வரிசையாக பெவிலியனுக்கு நடையைக் கட்டினார்கள். டன்சித் ஹசன் 16 ஓட்டங்கள், மெகதி ஹசன் மிராஸ் 30 ஓட்டங்கள், நஜிபுல் சாந்தோ 7 ஓட்டங்கள் என ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி கடும் இக்கட்டில் சிக்கியது.

ஆனால் அதன்பின்னர் அனுபவ வீரர்கள் முஸ்பிகியூர் ரஹீம் மற்றும் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் இருவரும் இணைந்து நிதானமாக அணியை மீட்டெடுக்க ஆரம்பித்தார்கள். இவர்கள் 96 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தபோது, ஷகிப் அல் ஹசன் ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதன்பின்னரும் நிலைத்து விளையாடிய முஸ்பிக்யூர் ரஹீம் 60 ஓட்டங்களை எடுத்தார். ஆயினும் மறுபுறத்தில் பங்களாதேஷ் விக்கெட்டுக்கள் ஒவ்வொன்றாக நியூஸிலாந்தின் பந்துவீச்சில் தகர்ந்து கொண்டே இருந்தன. தவ்ஹித் ஹ்ரிடாய் 13 ஓட்டங்கள், டஸ்கின் அகமத் 17 ஓட்டங்கள், முஸ்தஃபிஷர் ரஹ்மான் 4 ஓட்டங்கள், சோரிஃபுல் இஸ்லாம் ஆட்டமிழக்காது இரு ஓட்டங்கள் எடுக்க இறுதிநேரம் அதிரடி காட்டிய முகமதுல்லா இறுதிவரை ஆட்டம் இழக்காமல் 41 ஓட்டங்களை எடுத்தார்.

50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் அணி 245 ஓட்டங்கள் எடுத்தது. நியூஸிலாந்து அணி சார்பாக போல்ட் மற்றும் ஹென்றி தலா இரண்டு விக்கெட்டுகளையும், லாக்கி பெர்குசன் மூன்று விக்கெட்டுகளையும், சான்ட்னர் மற்றும் பிலிப்ஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி விளையாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு ரச்சின் ரவீந்தரா 9 ஓட்டங்கள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். டெவோன் கான்வே 45 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட பங்களாதேஷ் அணி சற்று உத்வேகம் கொண்டது. ஆனால் அதன்பின்னர் அணித்தலைவர் கேன் வில்லியம்சனை அவர்களால் அசைக்க முடியவில்லை. 107 பந்துகளில் 78 ஓட்டங்கள் எடுத்த வில்லியம்ஸன் ஆட்டத்திலிருந்து வெளியேறினார். களத்தில் இருந்த டேரில் மிட்சல் 67 பந்துகளில் 89 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் அணியின் வெற்றியை 42.5 பந்துப்பரிமாற்றத்தில் உறுதி செய்தார். இவருடன் கிளன் பிலிப்ஸ் ஆட்டம் இழக்காமல் 16 ஓட்டங்கள் எடுத்தார்.

நியூஸிலாந்து அணிக்கு நடப்பு உலகக் கோப்பையில் தொடர்ச்சியாக இது மூன்றாவது வெற்றியாகும். இதன் மூலம் புள்ளி பட்டியலில் தென்னாபிரிக்காவை கீழே இறக்கி முதலிடத்துக்குச் சென்று இருக்கிறது. இந்தியா மூன்றாவது இடத்தில் தொடர்கிறது. பங்களாதேஷ் அணிக்கு இது இரண்டாவது தோல்வியாகும்.




# குசல் மெண்டிஸ் களமிறங்குவார்!

இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் குசல் மெண்டிஸுக்கு பாகிஸ்தான் அணியுடனான மோதலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு தற்போது குணமாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மெண்டிஸ் தொடரில் அடுத்ததாக அவுஸ்திரேலிய அணியுடனான ஆட்டத்தில் பங்கேற்பார் என நம்பப்படுகின்றது.

குசல் மெண்டிஸ் பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்தில் தசைப்பிடிப்புக்கு ஆளாகியிருந்ததோடு, இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தின் பின்னர் களத்தடுப்பில் ஈடுபடவும் வந்திருக்கவில்லை. இதன் காரணமாக சதீர சமரவிக்ரம இலக்குக் காப்பாளராக பணியாற்றினார். (ஒ.5)



# தோல்வியால் துவள்கிறோம்

## அவுஸ்திரேலிய அணித் தலைவர் வேதனை

'தென்னாபிரிக்க அணியை 311 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது மகிழ்ச்சி அளித்தது. இந்த இலக்கை எட்டலாம் என்று நினைத்தோம். ஆனால் அவர்களின் பந்து வீச்சாளர்கள் உண்மையிலேயே சிறப்பாக பந்து வீசி கட்டுப்படுத்தி விட்டனர். தோல்வி மிகுந்த வேதனை அளிக்கிறது. தவறுகளை திருத்திக் கொண்டு அடுத்த ஆட்டத்தில் வலுவாக மீண்டு வர முயற்சிப்போம். சில விடயங்களை சரி செய்ய வேண்டி உள்ளது. இந்த உலகக் கிண்ணத்தில் சவாலான ஒரு அணியாக இருக்க விரும்பினால், எல்லாவிதமான கால நிலைக்கு தகுந்தபடி மாற்றிக்கொண்டு செயல்பட வேண்டும், என்று குறிப்பிட்டார் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் குமின்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினம் ஒரு பரிசு — நாள் 8 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| த.மகேஸ்வரி | - நெடுந்தீவு | ஜி.புஸ்பவதி | - நீராவியடி |
| க.தயாபரன் | - சுழிபுரம் | ப.மதுமிதா | - யாழ்ப்பாணம் |
| பா.பார்தீபன் | - சுன்னாகம் | இ.ஆராத்தியா | - சாந்தபுரம் |
| சு.சுபரமி | - உடுவில் | சா.சொரூபா | - பாரதிபுரம் |
| என்.ஜெனத்தன் | - குருநகர் | த.கலைமகள் | - புதுக்குடியிருப்பு |
| மா.வருணபாலன் | - ஆறுகால்மடம் | ஆர்.இராகவன் | - புதுக்குளம் |
| பி.அபிநயன் | - யாழ்ப்பாணம் | செ.சேதுரூபன் | - எருக்கலம்பிட்டி |
| ந.அபிப்பிரியன் | - யாழ்ப்பாணம் | | |

# இலங்கைக்கு எதிராக வெல்வதும் கடினமே

### அவுஸ்திரேலியாவை சாடும் முன்னாள் தலைவர் கிளார்க்



தென்னாபிரிக்கா அணியுடனான தோல்வியை அடுத்து அவுஸ்திரேலிய அணியை வறுத்தெடுத்திருக்கிறார் அந்த அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க். 'தென்னாபிரிக்கா அறிவுபூர்வமாக ஆடியது. ஆட்டத்தை நன்றாகக் கணித்தனர். ஹசில்வுட், ஸ்ராக்கை நன்றாக ஆடிவிட்டு அதன் பிறகு அடிக்கத் தொடங்கினர். இதனால் அவுஸ்திரேலியா அவ்வளவுதான் என்று நான் கூறவில்லை. இவ்வாறானதொரு நிலைமையில் இலங்கைக்கு எதிராக ஆடுவதுமே கடினம். பாகிஸ்தானுடன் இருக்கிறது. ஆகவே நாம் சரியாக ஆடவில்லை எனில் தொடரை வெளியேற வேண்டியதுதான். தென்னாபிரிக்காவுக்கு எதிராகவே இப்படி ஆடுகிறோம் என்றால் துணைக் கண்ட அணிகளின் சுழற்பந்துவீச்சுக்கு எதிராக நம்மை பார்த்து இந்த உலகமே சிரிக்கும், என்றார் மைக்கல் கிளார்க். (ஓ,5)

## ரோஹித்துக்கு தங்கக் கிண்ணம்

இந்திய அணி பாகிஸ்தானுடன் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இன்று விளையாட உள்ளது. இந்நிலையில், அகமதாபாத்தை சேர்ந்த நகை வியாபாரி ரவூப் ஷேக் என்பவர் 0.9 கிராம் எடையில் தங்கத்திலான உலகக் கிண்ண மாதிரியை 2 மாதத்தில் வடிவமைத்துள்ளார். இன்று நடைபெற உள்ள இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தின் போது இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



## இன்றைய ஆட்டம் — ஓர் அலசல்

அகமதாபாத்தில் இன்று இந்தியா பாகிஸ்தான் இடையிலான உலகக் கிண்ணப் போட்டி பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெறவிருக்கின்றது.

பாகிஸ்தானை கிண்டல் செய்ய இந்திய ஊடகங்களும், ரசிகர்களும் சொல்லிப் பெருமைப்படும் ஒரு கணக்கு 70 என்பதாகும். அதாவது 1992 உலகக் கோப்பை முதல் 7 முறை உலகக் கோப்பைகளில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதியதில் ஏழிலும் இந்தியா வென்றது என்பதைக் குறிப்பதே இந்த 70 சமன்பாடு.

ஆனால் புள்ளிவிவரங்களை வைத்து கிரிக்கெட்டைக் கணித்துவிட முடியாது. அதனால் நாளைய ஆட்டத்தில் போக்கை இலகுவில் எதிர்வுகூறிவிடவும் முடியாது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரையில் இந்தியாவுடன் 134 ஒருநாள் போட்டிகளில் மோதியுள்ளது. இதில் பாகிஸ்தான் 73 போட்டிகளில் வென்றுள்ளது, இந்தியா 56 போட்டிகளில் வென்றுள்ளது என்பது அடுத்த புள்ளிவிவரம். உள்நாட்டில் இந்திய அணி 11 போட்டிகளில் வெல்ல பாகிஸ்தான் அவர்கள் நாட்டில் இந்தியாவுக்கு எதிராக 17 போட்டிகளில் வென்றிருக்கின்றனர்.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் உலகக் கிண்ணத் தொடர் சொந்த மண்ணில் நடப்பது பெரும் பலம். பெரும் ரசிகர் பட்டாள ஆதரவு இந்திய அணியின் உத்வேகத்தை அதிகரிக்கும். அதனால் பெரும்பாலானவர்களின் கருத்து, பாகிஸ்தான் அணியை விடவும் இந்திய அணி பலமான நிலையில் உள்ளது என்பதே. அதிலும் உண்மை இருக்கின்றது. இவை இந்திய அணியின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும்.

எல்லாவற்றுக்கும் அப்பால் இன்றைய ஆட்டத்தில் விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது என்பது திண்ணம்.

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 9**

**இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (14.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..............................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

**இந்தியா** — **பாகிஸ்தான்**


இடம் : அஹமதாபாத்
நேரம் : பி.ப. 2.00

PCB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
04 - 07 - 1938



ஆண்டவன் அடியில்
11 - 10 - 2023

## யோசுவா ஐசக் தம்பிராஜா (யோசேப்)

நவாலி கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு, அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஐசக் தம்பிராஜா கடந்த (11.10.2023) புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசுவா ஐசக் - மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புஸ்பமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சேவக்.ஐ.த.இயேசு சகாயம் (சின்னண்ணன் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம் - மருதனார்மடம்), ஐ. பொன்னுத்துரை, ஐ.அருளையா, ஐ.ஞானப்பிரகாசம் மற்றும் வண.ஐசக் செல்வரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நீற்றா (அவுஸ்ரேலியா), சரண்ஜிற் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசீலன், சஜினி ஆகியோரின் மாமனாரும், ஜெறோம், ஜூலியன், ஜெருஷா, ஜெசிக்கா, நவீன், கரோலின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளைமறுதினம் (16.10.2023) திங்கட்கிழமை 15 / 11 Bryants Road, Dandenong Victoria - 3175, Australia இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
**077 306 8122**

தகவல் :
ஐசக். குடும்பத்தினர்.
**006 140 296 4664**

(CS 2654 AK-1)

# நெஞ்சை விட்டு அகலாத பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
12 . 04 . 1961



ஆண்டவன் அடியில்
29 . 09 . 2008

## அமரர் கந்தசாமிப்பிள்ளை விக்னராஜேஸ்வரன்

(ISA, B.Sc, Dip.Ed,SLPS)

**திதி: 14.10.2023 (அமாவாசை)**

அன்பின் அணிகலனே அறிவின் சிகரமே
பண்பின் இலக்கணமே பாசத்தின் உறைவிடமே
நெஞ்சம் உமக்கே இடமாகவைத்தோம்
நினையாமல் ஒரு போதும் இருந்தறியோம்....

உங்கள் ஆத்மா வடிவாம்பிகை சமேதர முன்னை நாதர் தாள்சேர வேண்டுகின்றோம்.

என்றும் பிரிவுத் துயரால் வாடும்
அன்பு மனைவி - குடும்பத்தினர்.
3 ஆம் வட்டாரம், நயினாதீவு.

பன்னாலை,
தெல்லிப்பளை.

(cr.52468) (N.I)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2023.11.01ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கு **இருவரை** நியமிக்கும் வகையில் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சேவை நிபந்தனைகள்

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்

### அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப் பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

### கொடுப்பனவு விபரம்

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

### தெரிவு செய்யப்படும் முறை

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 27.10.2023 மு.ப 10.00**

ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(cr 40767) (N.I)

# University of Jaffna

## Kandiah Karthigaesan Tamil Library Trust Fund
## Preservation and Digitization of Sri Lankan Tamilology Collection

University of Jaffna, Sri Lanka will entertain applications for the "Project Assistant" full-time contract basis under the project titled "Preservation and Digitization of Sri Lankan Tamilology Collection" from suitable qualified persons.

**Required Qualifications and Experience**

Should have passed the G.C.E (O/L) examination in six subjects (not more than two sittings) with two credit passes including Tamil language and mathematics and Ordinary pass in English language.

AND

Should have passed the G.C. E. A/L examination with three passes.

AND

Should have obtained a certificate of proficiency in NVQ level 5 or above issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Library Science, Social Science, Arts and Humanities, Siddha Medicine, and Applied Science.

* Preference will be given for those have obtained a certificate of proficiency not below the NVQ level 4 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or a recognized Institution in the field of Information Communication and Multimedia Technology/ Information and Communication Technology/ Information Technology/ Database Management System/ Graphic design

**Salary:** LKR 30,000.00 per month. In addition, EPF 12% and ETF 3% will be paid.
**Age Limit:** Not more than 35 years on the closing date of application.
HOW TO APPLY:
Candidates who are interested should submit their applications in the prescribed format available on the University website – www.jfn.ac.lk to the Librarian, Library, University of Jaffna, Ramanathan Road, Thirunelvely, Jaffna by registered post with certified photocopies of the relevant certificates on or before 31.10.2023 for further details of Terms of Reference (TOR) please visit the website (www.jfn.ac.lk)

Registrar
University of Jaffna
13.10.2023

(cr.37666) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள்,வாகனத்தரிப்பிடம் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2024

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 27.10.2023 வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 27.10.2023 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 27.10.2023 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 56,100.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 60,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி மாட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 400,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி பன்றிறைச்சிக் கடை | 1,000.00 | 200,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 121,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 890,685.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 121,605.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 585,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ..... | 27,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை கோழிக்கடை | 1,250.00 | 30,250.00 | 1,000.00 | 1,000.00 |
| 11 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 628,820.00 | 10,000.00 | 1,000.00 |
| 12 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை இல 01 | 2,000.00 | 761,340.00 | 10,000.00 | 1,000.00 |
| 13 | கும்பலை சந்தைக்குள் அமைந்துள்ள கோழிக்கடை இல 02 | 2,000.00 | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 14 | கும்பலைச்சந்தை | ...... | 364,265.00 | 5,000.00 | 1,000.00 |
| 15 | கும்பலைச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தை | ........ | 60,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 84,700.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 16,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | கணேஸ்வரம் சந்தை | ......... | 48,950.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | கணேஸ்வரம் சந்தைகோழிக் கடை | 1,000.00 | 60,610.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | கீரிமலை மரக்கறிச்சந்தை | ......... | 29,480.00 | 1,000.00 | 1,000.00 |
| 07 | வீமன்காமம் பொதுச்சந்தை | .......... | 485,400.00 | 5,000.00 | 1,000.00 |
| 08 | வீமன்காமம் பொதுச்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 20,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 09 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 768,480.00 | 10,000.00 | 1,000.00 |
| 10 | வீமன்காமம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 593,870.00 | 5,000.00 | 1,000.00 |
| 11 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 22,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 12 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 16,000.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | குரும்பசிட்டி சந்தை | .......... | 12,320.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 44,220.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 191,180.00 | 1,000.00 | 1,000.00 |
| | காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | .......... | 75,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை கோழிக்கடை | 1,200.00 | 85,450.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 73,700.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 66,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 58,630.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு:**

- மாதவாடகை யாவும் விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.
- விண்ணப்பம் பெறுபவர்கள் பிரதேசசபையின் கறுப்புப்பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது அவ்வாறு இருந்து சித்திபெற்றிருந்தால் அவர்களுடைய கேள்வி இரத்து செய்யப்படும்
- பிரதேச சபையினால் அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலிருந்து இறைச்சிகளை கொண்டுவரவேண்டும்
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒருபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, காங்கேசன்துறை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்களை மேற்படி உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- பிரதேசசபையின் நிர்வாகத்திற்குட்பட்ட சந்தைகளிலிருந்து 500 m தூரத்திற்கு உட்பட்ட கடைகளிலோ அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறி, கோழி இறைச்சி கடலுணவு விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
- சந்தை,வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு எடுப்பவரால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.
- பிரதேசசபையால் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்

**திரு.சு.சுதர்ஜன்**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை. 14.10.2023**

(ச.40771) (N.1)




# ஜனாதிபதிக் களத்தில் இறங்குவதற்கு தயார்!

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கைகள் விடுக்கப்படுமானால் அதனை ஏற்பதற்குத் தயாராகவே இருக்கின்றேன் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றேன், எனினும், மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தாலும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் இல்லாவிட்டால் உரிய வகையில் செயற்படமுடியாது.

எனது கொள்கை ரீதியிலான அரசியலை முன்னெடுக்கவே நாடாளுமன்றத் தேர்தலில்கூட போட்டியிட்டேன், முதுகெலும்பு இருக்கும்வரை அரசியலில் ஈடுபடுவேன் - என்றார். (ச-44)

# இலங்கை - ஆஸி. ஒப்பந்தம் நீடிப்பு

கொழும்பு, ஒக்.14
இலங்கை - அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டுச் சட்டக ஒப்பந்த காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா இலங்கையின் முக்கியமான நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் தரப்பாக இருப்பதுடன், சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் 5 ஆவது நாடாகவும் உள்ளது.

இரு நாடுகளுக்கிடையில் இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி இலங்கை - அவுஸ்திரேலியா வர்த்தக மற்றும் முதலீட்டுச் சட்டக ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தை தொடர்வதற்காக எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வகையில் வர்த்தக, வணிக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
(எ-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணையில் அவநம்பிக்கை

## நீதிக்கான கத்தோலிக்கக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதியும் அரசாங்கமும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக பார பட்சமற்றவெளிப்படையான விசாரணையை நடத்துவதற்கு உரிய முயற்சியை மேற் கொண்டுள்ளனர் எனத் தோன்றவில்லை என்று நீதிக்கான கத்தோலிக்கக் குழு தெரி வித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான தேசிய கத்தோலிக்கக்குழு ஒன்பதாம் திகதி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ் வாறு தெரிவித்துள்ளது.

அதில் உள்ளதாவது-

'அரகலய' மூலம் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக பார பட்சமற்ற வெளிப்படையான விசாரணையை நடத்துவதற்கு உண்மையான முயற்சியை மேற்கொண்டுள்ளனர் எனத் தோன்றவில்லை. நியாயமான - சுயாதீன மான - வெளிப்படையான விசாரணையே தேவை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி உண்மையான ஆர்வத்தைக் கொண்டிருந்தால் அவர் குற் றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இடம் பெற்ற இடமாற்றங்களை மாற்றியமைத்து அவர்கள் விட்ட இடத்திலிருந்து விசாரணை களை ஆரம்பிக்க வேண்டும். தற்போ தைய நடவடிக்கைகள் குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றன.

இந்த பெரும் துயரச் சம்பவத்தின் பின் னால் உள்ள பெரும் சதித் திட்டம் மறைக் கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(எ-இ)


## கேள்வி அறிவித்தல் - 2023

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை,
### புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்

01. மூலதன ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

02. **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி:** 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 16.10.2023 தொடக்கம் 26.10.2023 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 16.10.2023 ஆம் திகதியிலிருந்து 26.10.2023 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 **(வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 27.10.2023 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக் கப்படும்.

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 45 (11.12.2023) நாட்கள் வரை செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./ Dev/03/2023 | அலுவலக பாவனைக்கான தளபாடங்கள் கொள்வனவு | சபை நிதி | 5.5 | 30 நாட்கள் | வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் | 55,000.00 | 08.01.2024 |
| NPC/MUL/PTKPS/ PSDG/ 2023/02 | வீதி விளக்குகள் கொள்வனவு | PSDG | 0.625 | 45 நாட்கள் | | 6,500.00 | 08.01.2024 |
| NP/14/44(04)/Cle. Ser/2024 | திருமுறுகண்டி ஆலய வளாகத்திலுள்ள சபை கட்டண கழிப்பிடம் மற்றும் அண்டிய சூழலிற்கான சுத்திகரிப்பு பணி | சபை நிதி | - | 365 நாட்கள் | | 20,000.00 | 08.01.2024 |

09. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு**
**14.10.2023**

(cr.36243) (2.6)


## உரியவர்கள் பொறுப்பேற்க

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ். போதனா மருத்துவமனை வளாகத்துக்குள் நகை யொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் மருத்துவமனை பிரதிப் பொறுப்பாளரைத் தொடர்பு கொண்டு தகுந்த ஆதாரங் களைச் சமர்ப் பித்து நகையை அடையாளம் காட்டிப் பொறுப் பேற்றுக்கொள்ளு மாறு மருத்துவம னையின் பிர திப்பணிப்பாளர் அறிவித்துள் ளார்.

(ச)


**car விற்பனைக்கு**

KC xxxx இலக்கமுடைய
SUZUKI SWIFT (1.3) (Japan Car)
விற்பனைக்குண்டு

077 797 0808

**வீடு வாடகைக்கு**

பொன்னாலை வீதி,
மானிப்பாயில் உள்ள புதிதாகக்
கட்டப்பட்ட வீடு
வாடகைக்குண்டு.

077 464 8557

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 23 . 06 . 1946

மறைவு 25 . 09 . 2022

**அமரர் தளையசிங்கம் மகேஸ்வரி**

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அன்னையே – நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ – ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்கள் இதயத்தில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே – அம்மா
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களை விட்டுப் பிரியாது

24/2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
மருமகன், மகள்,
பேரப்பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

**திரு. வெலிச்சோர் ஜேம்ஸ் மரியதாஸ்**
**(தாசன்)**



மலர்வு 16.02.1949
உதிர்வு 09.10.2023

குருநகர் சென் ஜேம்ஸ் மேற்கு வீதியை பிறப்பிடமாகவும், யாழ். 4ம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட திரு. வெலிச்சோர் ஜேம்ஸ் மரியதாஸ் அவர்கள் (09.10.2023) திங்கட்கிழமை காலமானார்.

இவரின் இறுதிக்கிரியைகள் (14.10.2023) சனிக்கிழமை 3.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயசேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

111, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
077 846 8182

தகவல்:
குடும்பத்தினர்.

(cr 52482) (AK-1)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கிநின்று சமையல் செய்வதற்கு
பணிப்பெண் தேவை. வயது 45 - 50க்கு
உட்பட்டவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 344 5721

**காணி விற்பனைக்கு**

K.K.S.றோட் மல்லாகம்
(J-214) 2 1/4 பரப்பு (பழைய சோடா
கொம்பனி ஒழுங்கை அருகில்)
விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
T.P.: 077 753 2994

உ
சிவமயம்

**வேலணை பெருங்குளம்**
**முத்துமாரி அம்மன்கோவில்**
**பரிபாலன சபை**
**வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்**
**2023.10.29**

மேற்படி ஆலயத்தின் **2023 - 2024** நிதி ஆண்டின்
**(2023 ஒக்ரோபர் - 2024 செப்ரெம்பர்)** பரிபாலன சபை
தெரிவிற்கான வருடாந்தப் பொதுக்கூட்டம்
**எதிர்வரும் 2023.10.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
**முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.**
மேற்படி **2023 - 2024 நிதி ஆண்டிற்கு அங்கத்துவத்தை**
**புதுப்பித்தவர்கள்** அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு
தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

க.கந்தசாமி
(தலைவர்)

பரிபாலன சபை சார்பில்
12.10.2023

C.M. வரதராஜா
(செயலாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது அருந்தக் கொடுத்து சிப்பாயிடம் கொள்ளை

கொழும்பு, ஒக்.14

அநுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அண்மையில் தன்னிடமிருந்து 3 இலட்சத்து 64 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று கடற்படைச் சிப்பாய் ஒருவர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பாதிக்கப்பட்டவர் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நின்றபோது இரண்டு நபர்கள் அவருடன் உரையாடி மதுபானத்தை அவருக்கு அருந்தக் கொடுத்துள்ளனர்.

சிப்பாய் போதையில் மயங்கிய நிலையில், அவரது 3 இலட்சத்து 64 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கமாலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் 2 ஆயிரம் ரூபா பணம் என்பன அந்த நபர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# பல்கலை வன்முறைகள்; அறிக்கை கோரும் மன்று

கடந்த 3 வருடங்களில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று அனைத் துப் பல்கலைக்கழகங்களுக்கும் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு மாணவர்களால் துன்புறுத்தப்பட்டபோது, ஏற்பட்ட சேதத்துக்கு நட்டஈடு கோரி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்தபோதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

புவனேக அலுவிஹாரே, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு, களனி மற்றும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தமது சாட்சியங்களை முன்வைத்த துடன், இந்த விடயம் தொடர்பான அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கு காலஅவகாசம் வழங்க வேண்டும் - என்று கோரியிருந்தனர். (எ-இ)


## 9ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் கந்தையா நயினார்

(அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்)



தோற்றம் 10.01.1947 மறைவு 14.10.2014

திதி:14.10.2023

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்பதாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் - எம்முடன்
என்றென்றும் வாழும்

நீங்கா நினைவுகளுடன்...

குடும்பத்தினர்.

இல.05. 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.


# நாடகமாடுகிறது அரசாங்கம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.14

தேர்தலை ஒத்திவைத்து ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதே இந்த அரசின் எதிர்பார்ப்பாகும். தேர்தலை நடத்துவதற்குக் கூடப் போராட வேண்டிய நிலையே உள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு முற்படுகின்றது. அதைச் சாதாரண விடயமாகக் கருதமுடியாது. தேர்தல் முறைமையில் மாற்றம்வரும்வரை தேர்தலை ஒத்திவைக்கும் சூத்திரம்கூட இதன் பின்னணியில் இருக்கலாம்.

தற்போதைய அரசு தேர்தலை உரிய நேரத்தில் நடத்தும் அரசு அல்ல, ஜனாதிபதித்தேர்தலை ஒத்திவைப்பதற்கு வாய்ப்பு கிடைத்தால்கூட அதனையும் செய்யக்கூடிய அரசாகும். எனவே, தேர்தலை பெறுவதற்கும் கடுமையாகப் போராட வேண்டும் - என்றார். (எ-44)


## மரண அறிவித்தல்



தோற்றம் 02 - 09 - 1986

மறைவு 12 - 10 - 2023

### திருமதி சுகந்தன் தயாபரி

(தர்சினி)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் செல்வாநகர் கிளிநொச்சி மற்றும் இல 52, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகந்தன் தயாபரி (தர்சினி) அவர்கள் கடந்த 12.10.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வேந்திரன் மேரிசந்திரா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமை மருமகளும் சுகந்தன் (செலிங்கோ லைவ் சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் சுடர்நிலவன் (சாரங்கன் - அபி மோட்டார்ஸ்) கலைநிலவன் (மாணவன் - சா/இந்துக் கல்லூரி), எழில்நிலவன் (மாணவன் - சா/டிறிபேக் கல்லூரி), தன்சிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிஷாந்தினி, நிறஞ்சினி, பேபிசங்கீதா, நித்திகா, தனுசிகன், சிந்துஜமோகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயவர்மன், காலஞ்சென்ற பூலோகநாதன் மற்றும் சஜித், கனிஸ்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் :

T. சுகந்தன் (கணவர்)
077 8056 370

(CS 26550 M-1)



## மரண அறிவித்தல்



மண்ணில் 28 - 06 - 1953

விண்ணில் 12 - 10 - 2023

### முருகப்பர் சண்முகநாதன்

(முன்னாள் கிளை முகாமையாளர் - ஓட்டுசுட்டான் கூட்டுறவுச் சங்கம்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் உதயநகர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகப்பர் சண்முகநாதன் அவர்கள் கடந்த (12.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகப்பர் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் குமாரசாமி தவமணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் டலிதாராணியின் அன்புக் கணவரும் சங்கீதா, அமரர் லோஜினா, சசிப்பிரியா, யனோகா, றீகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விபுலன், பிரதீபன், தருசன், தமிழ்ப்பிரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபீதன், ஆதிக், அய்றா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 9645209
077 7274400
076 8630781
0033663562848 றீகன் (மகன்)

தகவல் :

குடும்பத்தினர்.

இல - 303, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

(CR 40774 M-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டையில் போதைப்பொருள் தடுப்பு, பால்நிலை சமத்துவம் தொடர்பில் பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு 'ஹெல்தி லங்கா' நிறுவன இணைப்பாளர் ரீ.பிரேமராஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-66)



வரணி பொதுநூலகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டிகள் அண்மையில் வரணி பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றன. (ச-9)

# உளநல தினத்தையொட்டி விழிப்புணர்வு நாடகம்



வவுனியாவில் உளநல தினத்தை முன்னிட்டு மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் அண்மையில் விழிப்புணர்வு நாடகம் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகமும், மாவட்ட பொது மருத்துவமனை உளநலப் பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் உளநல மருத்துவர் சுதாகரன், மருத்துவர் திருமதி வைதேகி திலீபன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுகாசினி சிவதர்சன், உளநலத்துறை உத்தியோகத்தர் திருமதி துஷாந்தன் பிரியதர்சினி, பாடசாலையின் அதிபர் நா. இந்திரகுமார், ஈச்சங்குளம் கிரா்ம அலுவலர் ஜே. அமலதாஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-110)





கொடிகாமம் மிருசுவில் தவசிகுளம் கண்ணகை அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்காக நிர்மானிக்கப்பட்ட கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நிலையத் தலைவர் து.கோகிலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன யாழ்.மாவட்ட முகாமையாளர் அ.யூட் நிஷாந்தன் பங்கேற்றார். (ச-9)

# ரென்னிஸ் சுற்றுப் போட்டி; சென். பற்றிக்ஸ் 2 இடங்கள்



முதலாம் இடம்



மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், ஒக். 14

பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட ரென்னிஸ் 20 வயது இரட்டையர் பிரிவுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் முதலாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையே ரென்னிஸ் 20 வயது இரட்டையர் பிரிவுப் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றிய சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான அ. பிரியஷாகான், அ. சனோஜன் 6:2 , 6:4 என்ற செற் கணக்கில் சென். ஜோன்ஸ் கல்லூரியை வென்று முதலாம் இடத்தையும், கொ.சியாம்சன் , அ. ஸ்டேபோன் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து 6:2, 3:6, 7:5 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைச்...

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்கும்படி ஐ.நா.மனித உரிமைகள் பேரவை நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அதற்குப் பதிலீடாக அரசாங்கத்தால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாக்கத் தவறியுள்ளது. பயங்கரவாதம் என்ற வரைவிலக்கணத்தின் கீழ் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கைதுகள், தடுத்து வைத்தல், விசாரணை போன்ற விடயங்களில் நீதித்துறையினரின் கண்காணிப்புப் போதுமானதாக இல்லை. ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தல், தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனம் செய்தல் போன்ற விடயங்களில் நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்புச்சட்டத்தை எடுத்துக்கொண்டால் இந்தச் சட்ட வரைவு பொதுமக்களின் தொடர்பாடலைக் கட்டுப்படுத்துவதுடன் அதிகாரத் தரப்பினர் தங்களுக்குப் பிடிக்காத விடயங்களை போலியானவை எனக்கூறி கைது செய்வதற்கும் சந்தர்ப்பம் அளிக்கிறது. அதிலுள்ள சரத்துகள் அதிகாரத் தரப்பினர் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்கும் தாங்கள் செய்வது எல்லாம் சட்டப்படிதான் செய்கிறோம் எனக் கூறுவதற்கும் வழி வகுப்பதுடன் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஐ.நா. நிபுணர்களுடனும் சிவில் சமூகத்தினருடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டு உரிய திருத்தங்களைச் செய்து சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு அமைவாக புதிய சட்ட வரைவுகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது. (அ-எ-6)

## குளவி...

நேற்று வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. கிளிநொச்சி, தருமபுரம் ஏ-35 வீதியிலுள்ள பனை ஒன்றில் இருந்த குளவிகள் கலைந்து வீதியால் பயணித்தவர்களைத் தாக்கியுள்ளன.

பாடசாலை மாணவன், மாற்றுத் திறனாளி உட்பட 7 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்த இடத்தில் பல தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் நடந்துள்ளன என்றும், குளவிக் கூட்டை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-எ-113)

## கோத்தா...

சிப்பாய்க்கு 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. சுனில் ரத்நாயக்க இந்தத் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார். சுனில் ரத்தநாயக்காவின் மனுவை ஏற்றுக்கொண்ட ஐந்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழுவினர் 2017ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி சுனில் ரத்நாயக்காவின் கோரிக்கைக்கு எதிராக ஏகமனதாக தூக்குத் தண்டனையை உறுதி செய்தனர்.

அதன்பின்னர் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் சுனில் ரத்நாயக்கா விடுவிக்கப்பட்டார்.

தற்போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் உயர்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், நீதியமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சபை ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர்நீதிமன்றம் 2024ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது. (அ-எ-6)

## பொலிஸ்மா...

அறிவித்துள்ளார்.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சி.டி.விக்ரமரத்னவின் பொலிஸ்மா அதிபர் பதவிக்காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் இதற்கு முன்னர் இரண்டு முறை, தலா 3 மாதங்கள் என்ற அடிப்படையில் நீடிக்கப்பட்டது. தற்போது புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் 3 வாரகாலம் ஜனாதிபதியால் நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு அரசமைப்பு சபையின் ஒப்புதல் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## 'சனல்-4'...

வுள்ளது. நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு தினத்திலும் காலை 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்குக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2023 ஒக்ரோபர் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு, உயிர்த்த ஞாயிறுத் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய "சனல் -4" அலைவரிசையால் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற விசேட குழுவை நியமிப்பதற்கான பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது என்று பதில் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ-எ-44)

## தீ விபத்தில்...

குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த சுகந்தன் தயாபரி (வயது-37) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் கடந்த 7ஆம் திகதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26-9)

## ரயிலில்...

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த மாணிக்கம் விஜயரத்தினம் (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 8ஆம் திகதி ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்திருந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26-9)

## கஞ்சாவோடு...

காங்கேசன்துறை மாவட்டப் பொலிஸ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவு சந்தேகநபரைக் கைது செய்துள்ளது. சந்தேகநபரிடம் இருந்து 28 கிராம் 100 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-எ-27)

## வாள்வெட்டில்...

காயங்களுக்கு இலக்காகியவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

## அடுத்துவரும்...

இந்தக் காற்றுச் சுழற்சி காரணமாக எதிர்வரும் 16 ஆம் திகதி தாழமுக்கம் உருவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது வடக்கு மாகாணத்துக்கு அண்மித்திருப்பதால் அடுத்த சில நாள்களுக்கு மேகமூட்டமாகவும், மிதமான மழை கிடைக்கும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளார்.

இந்த ஆண்டுக்கான வடகீழ்ப் பருவ மழை இந்தத் தாழமுக்கத்துடன் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் இரு திசைக் கடற்பரப்புகளில் ஒரே நேரத்தில் தாழமுக்கம் உருவாகியுள்ளமை அசாதாரண நிகழ்வாகும். இதனால் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் கனமழையை எதிர்பார்க்கலாம்.

இந்த இரண்டு தாழமுக்கங்களினாலும் எதிர்பார்த்த அளவுக்கு மழை கிடைக்காவிட்டால் இந்த ஆண்டுக்கான வடகீழ்ப் பருவ மழை தொடங்குவதற்குத் தாமதமாகலாம். ஏனெனில், பருவ மழை கிடைப்பதற்கான ஈரப்பதன் முழுவதையும் இவை உள்ளெடுத்து விடும் என்பதனால் இந்தத் தாழமுக்கங்களுக்குப் பின்னர் மழை கிடைப்பதற்கு குறைந்தது ஒரு வாரமாவது எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-66)

## 17 வயதுச்...

முறைப்பாடொன்றின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 23, 18, 17 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் சிறுமியின் நிர்வாண ஒளிப்படங்களை வைத்திருந்தனர் என்றும், நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது தாயார் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-எ-27)

## வடக்கில்...

கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கென பிராந்திய ரீதியில் 6 நிலையங்கள் பரீட்சைத் தாள்களைச் சேகரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 71 பரீட்சை இணைப்பு நிலையங்களும் 209 பரீட்சை நிலையங்களும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ச-26-125)

## உழவியந்திரத்துடன்...

(வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து தேர்தல் களத்தில் ஈழத்தமிழர்

வெலிங்டன், ஒக். 14

நியூஸிலாந்து நாட்டில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலில் தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தம் களமிறங்குகிறார். இந்தத் தேர்தலில் நியூஸிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டனை பிரதிநிதித்துவப்படுத்திய ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க்கட்சியான தேசியக் கட்சிக்குமிடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்த இரண்டு கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளதெனவும் சிறு கட்சிகள் துணைகொண்டு தேசியக் கட்சி ஆட்சி அமைக்கலாம் என்றும் அந்த நாட்டுக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அந்தவகையில் தேசியக் கட்சி தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட செந்தூரன் அருளானந்தம் போட்டியிடுகிறார். (ச-இ)


**காணி விற்பனைக்கு**

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

076 342 4705

(cs 524751 N 1)

**வாகனம் விற்பனைக்கு**

உற்பத்தி வருடம் 2014ம் ஆண்டு மகேந்திரா வடிவகை வாகனம் (Mahendra Bady) அலுமினிய body உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 070 521 2138

**மாபெரும் திறப்பு விழா**

K & P FAMILY RESTAURANT

K & P Family Restaurant

ஞாயிறு - ஒக்ரோபர் - 15 - 2023 | 11.01 AM

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

077 043 9980 , 021 228 6080

முதல் 100 வாடிக்கையாளர்களுக்கு

சிலைஸ் பீட்சா( Slice Pizza )

வரவேற்புபானம் ( Welcome Drink )

இலவசம்.


பாடசாலைத் தோட்டம் நிறுவல்

## புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகருக்கு விருது



யாழ்ப்பாணம், ஒக். 14

தொழில்முனைவுடன் கூடிய பாடசாலைத் தோட்டம் அமைக்கும் செயற்றிட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய விவசாயக்குழு விருது வென்றுள்ளது. வித்தியாலய அதிபர் சி.சிவகுமாரின் வழிகாட்டலில், விவசாயபாட ஆசிரியர் திருமதி. ஆரணி மற்றும் மாணவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சிக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பரிசில்தொகை விரைவில் கையளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்புடன் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அன்னையின் கரங்களில் 12 . 03 . 1956

கந்தனின் கழல்களில் 16 . 09 . 2023



கடந்த (16.09.2023) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புக் குடும்பத் தலைவி

**திருமதி சியாமளா விஜயஈஸ்வரன்**

திதி : ஆவணி மாதப் பூர்வபஷப் பிரதமை

எனது அன்பு மனைவி, எமது அன்புத் தாயார், அம்மம்மா, சகோதரி சியாமளா விஜயஈஸ்வரன் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நேரிலும், நேரில் வரமுடியாத சந்தர்ப்பத்தில் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி வாயிலாகவும், முகநூல் வாயிலாகவும், குறுஞ்செய்தி மூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் எம்மை ஆற்றுப்படுத்தி எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த யாவருக்கும், மலர்வளையம், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இன்றுவரை பல வழிகளில் உதவியாக இருந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.10.2023) சனிக்கிழமை காலை 05.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் நல்லூர் இல்லத்திலும் நடைபெறுவதோடு, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரையும் இவ்வழைப்பினைச் சூழ்நிலை கருதித் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

138/3, கோவில் வீதி,
(நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதி)
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
கணவர்: 077 0200 807
மகன் : 077 8210 139

(CR 40773) A-1

**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் இருந்து 100 m இல் 8 பரப்பு காணி விற்பனைக்குள்ளது.

4 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1 துண்டின் மொத்த விலை (2 பரப்பு) ரூபா 14,000,000

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பிற்கு சிறந்த காணி

பதிவுகளுக்கு முந்துங்கள்

தொடர்பு : 074 3161418, 077 4118851, 077 6714556

(CS 26536) M-1

**வேலையாட்கள் தேவை**

கோண்டாவில் பிரதேசத்தில் இயங்கும் ஹாட்வெயர் அன்ட் ரிம்பர் (மரம்) விற்பனை நிலையத்திற்கு காசாளர், விற்பனையாளர் தேவை.

(முன் அனுபவம் விரும்பத்தக்கது) நேரில் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: குகாபிறதேஸ்

C.T.B டிப்போ சந்தி, பலாலி வீதி, கோண்டாவில்.

(cs 53486) (N 1)


### சிறுதானியம் கையளிப்பு

கிளி., ஒக். 14

பச்சிலைப்பள்ளிப்பிரதேசத்தில் பொருளாதாரம் நலிவடைந்தமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சிறுதானியங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன. கமத்தொழில் அமைச்சின் உளுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கைத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவின் 18 கிராமஅலுவலர் பிரிவுகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே சிறுதானியம் வழங்கப்பட்டது. (ச-9)


**மர தளபாட உற்பத்தியாளர்களுக்கு**

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட JAI தச்சு வேலை மெசின்கள் ( JAI Wood Working Machines). எம்மிடம் உத்தரவாதத்துடன் நியாயமான விலையில். உதறல்கள் (Vibration) அற்றவை. கடின உழைப்பிற்கு உகந்தவை. 13" இல் இருந்து 18" வரையான மடிக்கக் கூடியவை. சகல பொருத்துகளுடன்.



**ஆர்க் என்ரபிறைசஸ்**

102, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571

Hotline: 071 535 7799 / 071 973 9917




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.